ளார் சத்யராஜ். அந்தஃபார்முலாப்படி சுந்தர் சியுடன்
யன்' படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் ஒரு
சியுடன் இணைந்து பாடியுள்ளார் சத்யராஜ்.

ல் கதாநாயகியாக நடித்தவர் மேகா நாயர். அதன்
வாய்ப்புகள் ஏதும் அமையாததால், அக்கா, தங்கை
முடிவு செய்துள்ளார். நவீன் எழுதி, இயக்கும்
படத்தில், புதுமுகம் செந்திலுக்கு அக்காவாக நடிக்கிற
அறியான்' படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம்
மேகா நாயர்.

யப்பை மாற்றி என்னை மொட்டைத் தலையுடன்
ன்னார் கே.வி. ஆனந்த். இதேபோல் இன்னும் பல
டுத்தார். அதனால்தான் அவர் இயக்கவுள்ள 'கோ'
து விலகிவிட்டேன்" - இப்படி அதிரடியாகக் குற்றம்
சிம்பு.

வுடன் மூன்று படங்களில் நடித்தார் பூஜா. பாலா இயக்கத்தில் 'அவன் இவன்' படத்தில் நடிக்கும் ஆர்யாவிற்கு ஜோடியாக நடிக்க தனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பியிருந்தார். ஆனால், பூஜாவுக்கு சான்ஸ் கிடைக்கவில்லை. ஆர்யாவும் பாலாவிடம் தன்னைப் பற்றி சிபாரிசு செய்யாததால் அவர் மீதும் கோபத்தில் இருக்கிறார் பூஜா.



❇ இரண்டு வருடங்களாக இரண்டு மொழிகளில் மணியான படத்தை எடுத்தார் இயக்குனர். ஒருவழியாக படத்தை முடித்து எடிட்டிங் டேபிளில் போய் உட்கார்ந்தவர் 'அட ராவணா' என்று பெருமூச்சு விடுகிறார். காரணம், எவ்வளவோ குறைத்த பிறகும் படம் மூன்றரை மணி நேரம் ஓடுகிறதாம். அதனால் வெட்டுவதும், ஒட்டுவதுமாக இருக்கிறார் இயக்குனர். ▲

# டுக்கம் !



ஓர் உதவி இயக்குனரின் உணர்வுபூர்வமான காதல் கதை.

என்ஜினீயரிங் முடித்துவிட்டு உதவி இயக்குனர் ஆகிறார் கார்த்திக். தான் குடியிருக்கும் வீட்டுக்கு மேல் தளத்தில் வசிக்கும் மலையாள கிறிஸ்துவ பெண்ணைக் காதலிக்கிறார். தனக்காக அந்தப் பெண்ணை கிறங்க வைக்கிறார். ஆனால், பெற்றோர் அவளை வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டதை தனது தங்கையின் மூலமே அறிந்து அதிர்ச்சியடைகிறார்.

இந்நிலையில், கால ஓட்டத்தில் இயக்குனராகிறார் கார்த்திக். தன்னைப் பாதித்த காதலையே முதல் படமாக எடுக்கிறார்.பாடல் ஷூட்டிங்கிற்காக வெளிநாடு செல்கிறார். அங்கே காதலியைப் பார்த்து பரவசப்படுகிறார். அவருடைய காதலி அப்போது என்ன நிலையில் இருக்கிறார், அதன் பிறகு என்ன நடக்கிறது என்பதுதான் மீதிப் படம்.

காதல் எப்போதும் எல்லோருக்கும் பிடித்தமான ஒன்று. அதை ஆழமாகவும், அழுத்தமாகவும் மனதை வருடும் விதத்தில் சொல்லியிருக்கிறார் இயக்குனர் கௌதம் மேனன். இதுவரை பார்த்திராத சிம்புவை இந்தப் படத்தில் பார்க்கலாம்.

த்ரிஷாவைப் பார்த்த நொடியிலேயே சிம்பு மெய் மறந்து நிற்கிறார். அவரிடமே வந்து த்ரிஷா ஒரு முகவரி குறித்து விசாரித்துவிட்டுச் செல்கிறார். அப்போது மீண்டும் த்ரிஷாவைப் பார்ப்பதற்காக கேட்டைத் தாண்டி குதிக்கும் இடத்தில் இளமைக் கொடி பிடித்துள்ளார் சிம்பு. இப்படியாக பல காட்சிகளைச் சொல்லலாம். காதலில் படும் அவஸ்தைகளை தத்ரூபமாக வெளிப்படுத்தியுள்ளார். அதேபோல் அழகான த்ரிஷா. காதலில்

# விண்ணைத் தாண்டி வருவாயா

உருகும்போதும், வேதனைப்படும்போதும் நடிப்பில் மிளிர்கிறார்.

கேமராமேனாக வருபவரின் பேச்சுக் கலகலப்பு. ஏ.ஆர். ரஹ்மானின் இசை படத்திற்கு பெரிய ப்ளஸ். அவரது குரலில் இடம்பெறும் 'மன்னிப்பாயா' பாடல் மிக அருமை. ஆனால், முதல் பாதியில் படம் பற்றிய ஆர்வத்தை காந்தசக்தி போல் கவர்ந்திழுக்கும் இயக்குனர் கௌதம் மேனன், இரண்டாம் பாதி திரைக் கதையைத் தெளிவாக உருவாக்கியிருக்கலாம். ❒

